O.S.12/2023

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.12/2023

வாதி தரப்பு 1வது சாட்சி கணேசன் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கணேசன் | வயது | : | 57/2025 |
| தகப்பனார் பெயர் | : | கருப்பையா | தாலுகா | : | திருமயம் |
| கிராமம் | : | ராயவரம், புதூர் வீதி | தொழில் | : | விவசாயம் |

நாள்-04.03.2025

வா.சா.1

(சாட்சி இன்று திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்கு விசாரணை**

1) எனது சொந்த ஊர் மேல்நிலைப்பட்டி. நான் ராயவரத்தில் குடியிருந்து வருகிறேன்.

2) நானும், பிரதிவாதியும் ஒரே வகுப்பில் படித்தோம் என்று கேட்டால் நாங்கள் இருவரும் 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரையில் ஒரே பள்ளிக்கூடத்தில் ஒன்றாக படித்தோம். எனக்கு பிரதிவாதியை 6ம் வகுப்பில் நாங்கள் படித்த காலத்திலிருந்து தெரியும் என்றால் சரிதான்.

3) எனது மனைவி பெயர் மீனாள் என்றும், எனது மைத்துனர் பெயர் சோலை என்றும் சொன்னால் சரிதான். சரவணன் என்பவர் எனக்கு உறவினர் இல்லை. அவர் எனது வீட்டில் ப்ளம்பிங் மற்றும் எலக்ட்ரீசியன் தொழில் செய்து வந்தார், அவரை எனக்கு தெரியும்.

4) நான் ராயவரத்தில் மீனாள் நகை அடகு கடை என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அவ்வாறு நான் 2011ம் ஆண்டு முதல் அந்த தொழிலை நடத்தி வருகிறேன். அதை நடத்துவதற்கு 2011ம் ஆண்டிலிருந்து எனக்கு முறையான உரிமம் இருக்கிறது. மேற்படி தொழில் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை செய்து, தணிக்கை அறிக்கை தயார் செய்வது வழக்கம் என்றால் சரிதான். எனக்கு அந்த தொழிலை தவிர இயற்கை விவசாயம் செய்யும் தொழில் உண்டு.

5) எனக்கு வருமானம் வரக்கூடிய தொழில் என்று கேட்டால் விவசாயம் தான். பிரதிவாதிக்கு நான் இந்த வழக்கு தொகையை கொடுத்தது தொடர்பாக அதற்கு முன்பு நான் வங்கியிலிருந்து பணம் எடுத்ததற்கான வங்கி கணக்கில் பதிவுகள் இருக்கிறது.

6) நான் வருமானவரி செலுத்தவில்லை. ஆனால், எனது வருமானத்திற்கான ரிட்டன் தாக்கல் செய்கிறேன். சுமார் 3 வருடங்களாக அவ்வாறு வருமானவரி ரிட்டன் தாக்கல் செய்து வருகிறேன்.

7) எனக்கு ஐசிஐசிஐ வங்கி, விஜயா வங்கி, தமிழ்நாடு கிராம வங்கி, இந்தியன் வங்கி மற்றும் அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றில் வங்கி கணக்குகள் இருக்கிறது. அவ்வாறு பிரதிவாதிக்கு நான் பணம் கொடுத்தற்காக, பணம் எடுத்தற்கான வங்கி கணக்கு பதிவுகள் இந்தியன் வங்கியை தவிர்த்து மற்ற மேற்படி அனைத்து வங்கி கணக்குகளிலும் பதிவுகள் இருக்கும். சாட்சி தாமாக பிரதிவாதிக்கு கொடுப்பதற்கு, நானும் ரொக்கமாக கொஞ்சம் பணம் வைத்திருந்தேன். எனது மனைவியிடமும் ரொக்கமாக கொஞ்சம் பணம் வாங்கியிருந்தேன் என்று தெரிவித்தார்.

8) பிரதிவாதி எப்போது என்னிடம் கடன் தொகை கேட்டார் என்று கேட்டால், நான் அவருக்கு பணம் கொடுத்த 29.12.2019 தேதிக்கு சுமார் 15 நாட்களுக்கு முன்பிருந்து பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார். பிரதிவாதிக்கு கொடுப்பதற்கான மொத்த தொகையையும் நான் 28.12.2019 அன்று தயார் செய்து வைத்திருந்தேன்.

9) என்னிடமும், எனது மனைவிடமும் சேர்த்து மொத்தமாக கையிருப்பில் ரொக்கமாக சுமார் ரூ.7,00,000/- இருந்தது. அதுபோக எனது மைத்துனர் க. சோலையிடமிருந்து ரூ.3,00,000/- வாங்கினேன். மேற்படி திரு. சோலையிடமிருந்து, மேற்படி தொகையை நான் கைமாற்றாகத்தான் வாங்கினேன். அவர் மளிகை கடை வைத்திருக்கிறார்.

10) எனக்கோ, எனது மனைவிக்கோ, எனது மைத்துனருக்கோ பணம் வட்டிக்கு கொடுத்து வாங்கும் தொழில் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி உதவி என்று கேட்டதால் கொடுத்தேன் என்று சாட்சி தாமாக தெரிவித்தார்.

11) பிரதிவாதி அரசு போக்குவரத்து கழகத்தில் வேலை பார்த்து, பின்னர் விவசாய வேலை செய்து வந்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு என்ன தொழில் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் தான் விவசாய நிலங்கள் வைத்திருப்பதாகவும், விவசாயம் செய்து வருவதாகவும் பிரதிவாதி சொல்லுவார் என்று சாட்சி தாமாக தெரிவித்தார்.

12) எனக்கு தமிழில் எழுத தெரியும். ஆங்கிலத்தில் எழுத தெரியாது. ஒரு எழுத்தையோ, கையெழுத்தையோ கையெழுத்து நிபுணர் மூலம் ஒப்பிட்டு பார்க்கலாம் என்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் தெரியும். அதை நான் கேள்விப்பட்டு இருக்கிறேன். எனது கையெழுத்து மற்றும் எழுத்துக்களை நீதிமன்றத்தில் எழுதி கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்று கேட்டால், ஆட்சேபணை இல்லை.

13) என்னிடம் காட்டப்படும் பாக்கெட் நோட்டில் உள்ள எழுத்துக்கள் எவையெல்லாம் என்னால் எழுதப்பட்டது என்று கேட்டால், அதில் எனது எழுத்துக்கள் எதுவுமே இல்லை. ( சாட்சியிடம் ஒரு பாக்கெட் நோட்டை காண்பித்து பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் கேட்கப்பட்டது.) மேற்படி பாக்கெட் நோட்டில் உள்ள கையெழுத்துக்களையும், நான் நீதிமன்றத்தில் எழுதி கொடுக்க தயாராக இருக்கும் கையெழுத்துக்களையும் கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி ஒப்பிட்டு பார்ப்பதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

14) பிரதிவாதி அவசர குடும்ப தேவைக்காகவும், மறுநாள் தேர்தல் வர இருப்பதாகவும் சொல்லி என்னிடம் பணம் கேட்டார். பிரதிவாதி தேர்தல் செலவுக்காகவும், குடும்ப செலவுக்காகவும் பணம் கேட்டார் என்ற விபரத்தை எனது வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்று கேட்டால், அவசர குடும்ப செலவுக்காக அவர் கேட்டதாக எனது வழக்குரையில் சொல்லியிருக்கிறேன்.

15) காலை சுமார் 10.30 மணியளவில் நான் கடன் கொடுத்தேன். இதே நீதிமன்றத்தில் நான் கடனுறுதி சீட்டின் பேரில் வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். அதேபோன்று நான் இரண்டு வழக்குகளை தாக்கல் செய்து அது திருமயம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது மனைவியையும், எனது மைத்துனர் சோலையையும் சாட்சிகளாக விசாரிப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னால் சரிதான்.

16) வா.சா.ஆ.1ல் உள்ள கைரேகை யாருடைய கைரேகை என்று கேட்டால் என்னிடம் கடனாக பணம் வாங்கியவரின் கைரேகை. வா.சா.ஆ.1ல் எதற்காக இரண்டு கைரேகைகள் வாங்கியிருக்கிறேன் என்று கேட்டால் முதலில் போட்ட கைரேகையில் மை சற்று கம்மியாக இருந்தது. அதனால் சந்தேகம் ஏற்பட்டு நாளைக்கு கடன் வாங்கவில்லை என்று சொல்லிவிடக்கூடாதே என்ற எண்ணத்தில் தெளிவாக மற்றொரு கைரேகை வாங்கினோம்.

17) எங்கள் வீட்டில் வைத்து இந்த கடன் தொகை கொடுக்கப்பட்டது. வங்கியிலிருந்து எவ்வளவு தொகை என்னால் எடுக்கப்பட்டது என்று கேட்டால், நான் வங்கிகளிலிருந்து கொஞ்சம், கொஞ்சமாக பணம் எடுத்து சேர்த்து வைத்திருந்தேன். வங்கியிலிருந்து பணம் எடுத்தது போக எனது கையில் ரொக்கமாக எவ்வளவு இருந்தது என்று சொல்லமுடியுமா என்று கேட்டால், அதை சொல்ல முடியாது. ஏனென்றால் வங்கியிலிருந்து எடுத்த தொகைகள் மற்றும் எங்கள் கையிருப்பில் இருந்தது எல்லாம் சேர்த்துதான் மொத்தம் ரூ.7,00,000/- இருந்தது. எனது மனைவி கொடுத்த தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா என்று கேட்டால் அது எனக்கு தெரியாது. ஏனென்றால் எங்கள் இருவர் தொகையும் ஒன்றாகத்தான் இருந்தது.

18) எனது மனைவி பராமரித்து வந்த நகை கடன் பதிவேட்டில் எனது மனைவி எனக்கு கொடுத்த பணம் பதிவு செய்யப்பட்டிருக்காது. எனக்கு கடனுறுதி சீட்டு பூர்த்தி செய்யத்தெரியும் என்று சொல்வது சரியல்ல. எனக்கு அது தெரியாது.

19) பிரதிவாதி காலை 10.00 மணியளவில் எனது வீட்டிற்கு வந்தபோது, எங்கள் வீட்டில் யார், யார் இருந்தார்கள் என்று கேட்டால், நான் மற்றும் எனது மனைவி, எனது மைத்துனர் சோலை மற்றும் எனது வீட்டில் ப்ளம்பிங் வேலை செய்த சரவணன் ஆகியோர் இருந்தோம்.

20) பிரதிவாதி 15 நாட்களுக்கு முன்பு என்னிடம் கடன் கேட்டிருந்ததால், நான் மேலே குறிப்பிட்ட தேதியில் வந்து வாங்கிக்கொள்ளும்படி சொன்னதன் பேரில் அன்றைய தினம் எங்கள் வீட்டிற்கு பிரதிவாதி வந்தார்.

21) பிரதிவாதிக்கும், எங்கள் குடும்பத்திற்கும் ஏற்கனவே கொடுக்கல், வாங்கல் எதுவும் இருந்ததா என்றும், அவ்வாறு இருந்தால் எவ்வளவு கொடுக்கல், வாங்கல் இருந்தது என்றும் கேட்டால், இதற்கு முன்பு எங்களுக்குள் கொடுக்கல், வாங்கல் எதுவும் இல்லை.

22) பிரதிவாதி என் மீது காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார். அதில் என்னிடம் கடன் வாங்கிவிட்டு அதை அவர் அதை திருப்பி கொடுத்துவிட்டதாகவும், ஆனால் அதற்குரிய புரோநோட்டை நான் அவரிடம் திருப்பி கொடுக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தார். ஆனால் போலீசார் விசாரித்துவிட்டு அந்த புகார் பொய் என்றும், நீங்கள் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறும் கூறிவிட்டார்கள்.

23) அவ்வாறு புகார் கொடுப்பதற்கு முன்பே பிரதிவாதிக்கு இந்த வழக்கில் கண்ட பணத்தை கேட்டு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டேன். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் 29.12.2020 என தேதி கணினியில் தட்டச்சு

செய்யப்பட்டு, பின்னர் அதை அடித்து பேனாவினால் 29.12.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

24) எனது வழக்குரையில் தொழில் அபிவிருத்திக்காக பிரதிவாதி கடன் கேட்டதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான்.

25) நான் சொல்லும் தேதியில் பிரதிவாதிக்கு எந்த தொகையும் நான் கடனாக கொடுக்கவில்லை என்றும், அந்த தேதியில் ரூ.10,00,000/- கடனாக கொடுக்கக்கூடிய அளவிற்கு எனக்கு பொருளாதார வசதியும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

26) பிரதிவாதி எனக்கு நெருங்கிய நண்பர் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கைரேகைகள் மற்றும் கையெழுத்துக்கள் பிரதிவாதியினுடையது அல்ல என்று சொல்வது சரியல்ல.

27) ஏற்கனவே 2013ம் ஆண்டில் என்னிடம் பிரதிவாதி பெற்றிருந்த கடன் முழுவதையும், 2017ம் ஆண்டிலேயே அவர் என்னிடம் திரும்ப செலுத்திவிட்டார் என்று சொல்வது சரியல்ல. வா.சா.ஆ.1-ஐ போர்ஜரியாக உற்பத்தி செய்து, தேர்தல் முன் விரோதத்தின் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொல்வது சரியல்ல.

28) நான் கோரியபடி எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொல்வது சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.